**செய்தி வெளியீடு எண். 154** **நாள். 20.03.2018**

**தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் 23.03.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் Salcomp, Samsung, Gestamp, Wapco, Wipro போன்ற நிறுவனங்களால் 100-க்கும் மேற்பட்ட Front Office Clerk பணியிடங்களுக்காக வேலைநாடுநர்களை தேர்வு செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு கல்வித்தகுதியாக பட்ட படிப்பு முடித்தவர்கள் (Only any degree) மட்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட தகுதியுடையவர்கள் மட்டும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், TVS LOGISTICS SERVICES LTD, TELECOM DIVISION, CHENNAI அவர்கள் Floor staff–300 நபர்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார்கள். கல்வித்தகுதி SSLC முதல் Degree வரையாகும். எனவே, மேற்காணும் கல்வித்தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 23.03.2018 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள (மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகில்) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பணிநியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**